[1971 டிசம்பர் 11

இணைப்பு—1.

[93-ம் பக்கத்தில் 263-ஆம் எண்ணுள்ள, வெள்ளிக் குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

மாவட்ட மகளிர் நல அதிகாரியின் கடமைகளும் பொறுப்பும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மகளிர் நல அதிகாரி ஒருவர் (அரசிதழ் பதிவு பெறுதவர்) உள்ளார். இவர் மாவட்டத்தில் மகளிர் சிசு நலத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார். இந்த அதிகாரி மகளிர் நலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் பணி புரிகிறார். மகளிர் நலத்துறை மாநில சமூகநல வாரியத்துடன் இணைக்கப்படுவதற்கு முன் மாவட்ட மகளிர் நல அதிகாரி, காப்பு இல்லங்களில் சேர்க்கப்பட வேண்டியவர்களின் நேர்வுகளை ஆய்வு செய்யும் பணியைத் தவிர மகளிர் நல கிளைகள், பணி நிலையங்கள் ஆகியவற்றின் பொறுப்பு மட்டுமே வகித்து வந்தார்.

இப்போது, மாவட்ட மகளிர் நல அதிகாரி—

(1) மாவட்டத்தின் மகளிர்—சிசு நல திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ளார்;

(2) முக்கிய சேவகிகள், கிராம சேவகிகள் ஆகியோரது பணியை மேற்பார்வையிடுகிறார்;

(3) அலுவல் முறையில் மாவட்ட மகளிர் நலக் குழுவின் செயலாளராகப் பணியாற்றி அதன் கூட்டத்தை இரண்டு திங்களுக்கொருமுறை கூட்டுகிறார். அக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரிக்கிறார்;

(4) ஒரு திங்களில் 20 நாட்கள் மாவட்டத்தில் சுற்றிப் பயணம் செய்ய வேண்டும். மகளிர் நல சிசு நலத் திட்டங்கள் செயல்படும் நிலையைக் கண்டறியவும், மகளிர் மன்றங்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் கண்காணிக்கவும், மகளிர் நலக் கிளைகள், மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள், பாலர் பள்ளிகள், குடும்ப-சிசு-நலத் திட்டம், செயலுக்கு ஊட்டச் சத்துணவுத் திட்டம், "கேர்" நிறுவன உணவு வழங்கல் திட்டம், செயல்முறை விளக்க உணவு வழங்கல் திட்டம் முதலிய திட்டங்களைக் கண்காணிப்பதற்காகவும் இவர் இவ்வாறு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவர் திங்களொன்றுக்குக் கண்டிப்பாக 12 இரவுகள் அந்தந்த இடங்களில் தங்க வேண்டும்;

(5) திங்கள் தோறும் நடக்க வேண்டிய பணியாளர் கூட்டத்தை நடத்த வேண்டும்;

(6) மகளிர் பயிற்சி முகாம்களை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோடு சேர்ந்து நடத்த வேண்டும்;

(7) ஊராட்சி ஒன்றியங்களின் திட்ட வாரியான வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மகளிர் நலத் திட்டம் பற்றிய வரவு-செலவு மதிப்பீடுகளைப் பரிசீலனை செய்து அவற்றிற்கு ஒப்புதல் வழங்கவேண்டும்;

(8) வட்டார நிலைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்;

(9) மகளிருக்கான கைப்பணிப்பயிற்சி நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்களையும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் உதவியோடு தொடங்க வேண்டும்;

(10) திட்டப் பணிகளின் கீழ், பணி நிலையங்களையும் உற்பத்தி நிலையங்களையும் நடத்துவதற்கான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அங்கே பணி நடைபெற்று வருவதைக் கண்காணிக்க வேண்டும்; மேலும், அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் அவரே பொறுப்பாவார்.

(11) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் கூடும் மாவட்ட வளர்ச்சிக்குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்;

(12) பிற துறைகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அனைத்திலும் பங்கு கொள்ள வேண்டும்;

(13) முக்கிய சேவகிகள், கிராம சேவகிகள், கார் நிலைப் பணியாளர் ஆகியோருக்கு விடுப்பு, ஊதிய உயர்வு ஆகியவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

இணைப்பு—2.

[96-ம் பக்கத்தில் 272-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

திருச்சி மாவட்டத்தில் கீழே கண்ட முக்கியமான கனிவளங்கள் இருப்பதாகத் தெரியவருகிறது :—

1. **சுண்ணாம்புக்கல் :** திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர், அரியலூர், லால்குடி, ஆகிய வட்டங்களில் உள்ள கல்லக்குடி, ரெட்டிப்பாளையம், பெரிய நாகலூர், கல்பாடி, திருப்பத்தூர், சாணமங்கலம், நெய்குளம், செந்துறை, அமினபாத், ஹஸ்தினபுரம் ஆகிய இடங்களில் சுண்ணாம்புக்கல் இருக்கின்றது.

2. திருச்சிமாவட்டம், குளித்தலை வட்டம் மீனாட்சிபுரத்திற்கும், மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம் கஜிலம்பட்டிக்கும் இடையே 30 கிலோ மீட்டர் நீளத்திற்கும் சுண்ணாம்புக்கல் கிடைக்கின்றது.

வேதியல், சிமெண்ட் இதர தொழிற்சாலைகளுக்கு ஏற்றதான சுண்ணாம்புக்கல் மொத்தத்தில் சுமார் 42 மில்லியன் டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

2. **ஜிப்சம், செலஸ்டைட், பாஸ்பாட்டிக் நாடுல் :** பெரம்பலூர் வட்டம், குன்னத்திற்கும் லால்குடி வட்டம் பெரிய கொருக்கைக்கும் இடையே ஜிப்சம் கிடைக்கிறது. ஜிப்சத்துடன் கலந்து செலஸ்டைட்டும் (Celestite) பாஸ்பாட்டிக் நாடுலும் இந்த இடங்களில் கிடைக்கின்றன. இவ்விடங்களில் சுமார் 13 மில்லியன் டன்கள் ஜிப்சம் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது. செலஸ்டைட்டும், பாஸ்பாட்டிக் நாடுல் மிகவும் சிறிதளவே கிடைக்கின்றது.